காவல் கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு / ஊழல் தடுப்பு இராமநாதபுரம் மாவட்ட அவர்களின் மேற்பார்வை

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

(1)

C 8081606

1. District மாவட்டம்: இராமநாதபுரம் | PS காவல்நிலையம்: உத்தரகோசமங்கை | Year ஆண்டு: | FIR No. மு.த.அ. எண்: 02/2022 | Date நாள்: 24/01/2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC Act 2018 மற்றும் 465,
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 467, 468 r/w 34 இதச
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 2020-2021 | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-01-2022 | Time : நேரம் 10.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் எண் 1. | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பேராட்சி அலுவலகம், பரமக்குடி மேற்கே 45 கிமீ தொலைவில்.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. நாகேஸ்வரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சேதுராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் 02-02-1976 | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் அரசு ஊழியர் | (g) Address : முகவரி உத்தரகோசமங்கை, இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   – தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது –

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**கனம் தலைமை குற்றவியல் நடுவர்/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களிடம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.**

**குற்றம் சாட்டப்பட்டவர்களின் முழுமையான விபரங்கள்(காலம்-7):**

The Details of Accused with full particulars (Column-7):

1. திரு.அ.வீரமுத்துகுமார், த/பெ அரியராஜாபூபதி,
முன்னாள் ஆணையாளர், பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்
தற்போது துரையூர் நகராட்சி, திருச்சி மாவட்டம்.

2. திரு.ரா.சண்முகவேல்,த/பெ ராஜூ,சுகாதார அலுவலர்,
பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

3. திரு.பா.மாரிமுத்து, த/பெ பாலுச்சாமி, சுகாதார ஆய்வாளர், பரமக்குடி நகராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.

(Separate Sheet attached)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி ......DSP...... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.1.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

INSPECTOR OF POLICE

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24-01-2022 at 1100hrs.

Name: VIGILANCE AND ANTI-CORRUPTION
Rank: நிலை ...RAMANATHAPURAM.......

**இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2022 பிரிவு ஊழல் தடுப்பு சட்டம், 2018 சட்டப்பிரிவுகள் 13 (2) r/w 13 (1) (a) மற்றும் 465, 467, 468, உ/இ 34 இந்திய தண்டனை சட்டம் தொடர்ச்சி:**

4. திரு.மு.பாண்டி, த/பெ முருகன், சுகாதார ஆய்வாளர், பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

5. திரு.மு.சரவணகுமார், த/பெ முருகன், சுகாதார ஆய்வாளர், பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

6. திரு.சா.தினேஷ்குமார் த/பெ சாத்தையா,சுகாதார ஆய்வாளர், பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

****

அய்யா,

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விழிப்பு அறிக்கை எண் 03/2020-ன் தொடர்ச்சியாக இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண்.23038/2020/LB/RM நாள் 07.07.2021 ன்படி காலம் 7ல் கண்ட 1 முதல் 6 வரையுள்ள எதிரிகள் மீது குற்ற எண். 02/2022 ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 சட்டப்பிரிவுகள் **13 (2) r/w 13 (1) (a)** மற்றும் **465, 467, 468, உ/இ 34** இந்திய தண்டனை சட்டத்தின்படி 24.01.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட வழக்கின் குற்ற விவரமானது, காலம் 7 ல் கண்ட எதிரிகள் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் பணிபுரிந்துள்ளார்கள் இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவு 2(C)ன் படி பொது ஊழியர் ஆவார். பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்களின் பணியானது அவர்களுக்கு பணிஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளுக்கு தேவைப்படும் சுகாதார தூய்மைப் பொருட்களுக்குரிய விபரங்களை குறிப்புகள் எழுதி வைப்பதாகும். பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் சுகாதார அலுவலரின் பணியானது, சுகாதார ஆய்வாளர்கள் எழுதிய குறிப்புரைகளின் பேரில் தேவைப்படும் பொருட்கள் பற்றிய விபரங்களை உறுதி செய்து ஆணையாளரின் பார்வைக்கு வைப்பதாகும். பரமக்குடி நகராட்சி ஆணையாளரின் பணியானது பொருட்கள் கொள்முதல் செய்யும் நிறுவனத்தின் விபரம் அறிந்து, பொருட்களின் விலை மற்றும் தரம் ஆகியவற்றை அறிந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால் அவசர காலத்தில் பொருட்கள் கொள்முதல் செய்யும் போது ஒப்பந்தப்புள்ளி மட்டும் கோர தேவையில்லை. முதன்மை செயலாளர் / ஆணையாளர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்புக்குழு, சென்னை அவர்களின் கடிதம் எண். 563/O.C1/2020, நாள் 19.03.2020-ன்படி **கோவிட்-19 தொற்றுநோய் தொடர்பாக ரூபாய் 6,00,00,000/- மாநில பேரிடர்**

நிவாரண நிதியிலிருந்து தமிழக அரசுக்குட்பட்ட அனைத்து 14 மாநகராட்சிகளுக்கும் மற்றும் 121 நகராட்சிகளுக்கும் அத்தியாவசிய பொருட்கள், சுகாதார தூய்மை பொருட்கள் மற்றும் கோவிட்–19 தொற்றுநோயை கட்டுப்படுத்தக்கூடிய சாதனங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், முதன்மை செயலாளர் / ஆணையாளர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்பு குழு, சென்னை அவர்களின் கடிதம் எண். 563/O.C1/2020, நாள் 08.04.2020–ன்படி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 22 கோடி தொகையானது நகராட்சிகளுக்கு கிருமி நாசினிகள், முககவசம், கையுறை, உணவு பொருட்கள் மற்றும் கோவிட்–19ஐ கட்டுப்படுத்தக்கூடிய சாதனங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்ததை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் 121 நகராட்சிகளுக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பரமக்குடி முதல்நிலை நகராட்சிக்கு ரூபாய் 37,50,000/– ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பரமக்குடி முதல்நிலை நகராட்சிக்கு ஒதுக்கிய ரூ.37,50,000/– மற்றும் மேற்படி நகராட்சியின் பொது நிதி பணம் ரூ.22,69,950/– ஆக மொத்தம் ரூ.60,19,950/– தொகைக்கு கிருமி நாசினிகள், முககவசங்கள், கையுறைகள், உணவுப்பொருட்கள், இயந்திரங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், தெர்மல் ஸ்கேனர்கள் மற்றும் இதர கிருமி நாசினி பொருட்களை எவர்கிரீன் சுற்றுச்சூழல் சேவை, நம்பர்.15, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிர்புறம், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம் என்ற முகவரியே இல்லாத போலியான கடையிலிருந்து கொள்முதல் செய்ததாக முறைகேடுகள் செய்து மேற்படி தொகையை சரியான முறையில் பயன்படுத்தாமல் அரசிற்கு இழப்பீடு செய்துள்ளார்கள். ஆகவே, எதிரிகள் மீது நம்பிக்கை மோசடி செய்ததற்காகவும், போலியான ஆவணங்கள் தயார் செய்ததற்காகவும், அந்த போலியான ஆவணங்கள் மூலம் மேற்படி தொகையை மோசடி செய்ததற்காகவும் அவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 சட்டப்பிரிவுகள் **13 (2) r/w 13 (1) (a)** மற்றும் **465, 467, 468,** உ/இ **34** இந்திய தண்டனை சட்டத்தின்படியும் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. ஒப்பம் திருமதி.N.ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். முதல் தகவல் அறிக்கையின் அசலை முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

24.1.2022

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
இராமநாதபுரம்.